இந்தியா. புதிய இந்திய சைன்யத்தில் மாதத்திற்கு 1,500 பேர்கள் சேருகிறார்கள். இந்திய உள்ளூர்ப் படைகள் 16½ படாலியனிலிருந்து 25½ படாலியனாக அதிகப்பட்டிருக்கிறது. மோட்டார் ஓட்டுதல், கூலிவேலை, தந்தியடிக்கும் வேலை, யுத்தகளத்தில் வெட்டுண்டவர்களுக்கு உதவும் வேலை, ஆஸ்பத்திரி வேலை—இவைகளுக்கு ஆள்களைச் சேர்க்க இந்திய ஸமஸ்தானங்களை இந்தியா கவர்ன்மெண்டு கேட்டிருக்கிறது.

சென்னை கவர்னர் யுத்த நிதிக்கு ரூ 12,90,000 இதுவரையில் சேர்ந்திருக்கிறது. இதில் ரூ 2,72,000 யுத்த தர்ம பண்டுக்காக சேர்த்த நிதி. இந்த தர்ம நிதிக்கு சேர்ந்தது மொத்தம் ரூ 5,32,000; இதில் ரூ 2,60,000 ஏற்கனவே வைஸ்ராயினுடைய War Purposes Fund-க்கு அனுப்பியாய்விட்டது. இந்தத் தொகையையும், மெயில் வார்ப்ளேன் பண்டாகிய ரூ 3,00,000யும் சேர்த்தால், சென்னை ராஜதானியில் வசூலாகியிருக்கும் யுத்த நிதி மொத்தத்தில் ரூ 18,50,000 ஆகும். ஒரு அணாவிலிருந்து ரூ 25,000 வரை நபர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

கடற்சண்டை. மெக்னிஸ் (Meknes) என்ற பிரெஞ்சுக்கப்பல் டார்பிடோவினால் தாக்கப்பட்டு, 24-ம்தேதி இரவு மூழ்கிப்போயிற்று. இதில் இங்கிலாந்தில் இருந்து அநேக பிரெஞ்சு ராணுவஸ்தர்கள் சுதேசத்துக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். கப்பல் கவிழ்ந்ததால் 300-பேர்கள் இறந்தார்கள்.

ஜூலை 14 முடிய வியாபாரக் கப்பல்களுக்கு எதிரியால் ஏற்பட்ட சேதம்:— பிரிடிஷ் கப்பல்கள் 9; நேயர்கள் கப்பல்கள் 4; நடுநிலை நாடுகள் கப்பல்கள் 6; மொத்தம் 19. 61,032 டன்கள்.

விமான யுத்தம். இதுவரையில் எதிரி தேசத்தின் மேலும் அவர்கள் பிடித்துக்கொண்டிருக்கும் தேசங்கள் மேலும் 1000 தடவை பிரிடன் விமானப் போர் செய்திருக்கிறது. 161 கைத்தொழிற் சாலைகள், 229 விமான நிலயங்கள், 258 ராணுவ ஸ்தலங்கள், 275 பாதைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. ஜூலை 1லிருந்து ஜூலை 18க்குள் 377 முறை விமானங்கள் எதிரி தேசங்களைத் தாக்கியிருக்கின்றன.

நடப்பு வாரத்திய விமானச்சண்டைகளின் விவரம் கீழே காணலாம் :—

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்
22—7—40	**விமான நிலயங்கள்.**—ஜெர்மனி—பீல்பெல்டு(Bielefeld), எஸ்சவீச் (Eschwege), டீப்கோல்ஸ் (Diepholz), பிரான்ஸ்—கேயன் (Caen), லிஸ்யூ (Lisieux), கிரீல் (Criel), சாடோடன் (Chateaudun), கார்மீல்ஸ் (Cormeilles), பாடர் பாரன் Paderborn).	2 விமானங்கள்.	
	ஆப்ரிக்கா.—எல் குப்பி (El. Gubbi), எல் ஆடம் (El. Adem), அம்ஹாசர் (Umn Hagar), மஸாவா (Massawa).		
	விமானத்தொழிற் சாலை.-ப்ரமன் (Bremen)-ல் இருக்கும் பாக் வுல்ப் (Focke Wulf).		
	எண்ணெய் ஆலை.—கீலன் கொர்சன் (Geilenkirchen), எஸ்ஸன் (Essen).		
	வெடிமருந்து சாலை.–க்ருப்ஸ் (Krupps).		
	எண்ணெய்க் கிடங்கு.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).		
	கப்பல் நிற்குமிடம்.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam). இஜ்மோடினு (Ijmuddin)க்கு மேற்கு.		
	கப்பல்கள், படகுகள்.—ஹெல்டர்(Helder)-க்கு தென்மேற்கு, டங்கர்க் (Dunkirk).	1 „	1
	ஆப்ரிக்கா.-டொப்ருக் (Tobruk) துறைமுகம்.		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்
23—7—40	**விமானத்தொழிற் சாலைகள்.**—கோதா (Gotha), காஸல் (Kassel), வென்ஸென்டார்ப் (Wenzendorf).		
	எண்ணெய்க் கிடங்குகள்.—ஹாம்பர்க் (Hamburg), கெல்ஸன்கர்சன் (Gelsenkirchen), டங்கர்க் (Dunkirk), ப்ளஷிங் (Flushing).		
	கப்பல் நிற்குமிடம்.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), ஜெர்மனியிலும், ஹாலந்திலும் இருக்கும் ரயில்வே பாதைகள், சாமான் கிடங்குகள், விமானஞ்சுடும் பீரங்கிகள், 12 விமான நிலயங்கள்.	1 விமானம்	1
24—7—40	**கப்பல் நிற்குமிடங்கள்.**—எம்டன் (Emden), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), ஹாம்பர்க் (Hamburg).		
	விமானத்தொழிற் சாலைகள்.—விஸ்மார் (Wismar), வென்ஸென்டார்ப் (Wenzendorf).		
	கடல் விமான நிலயங்கள்.—போர்கூம் (Borkum), டெக்ஸல் (Texel).	சேதமில்லை.	
25—7—40	**விமானத்தொழிற் சாலை.**—காஸ்டல் (Kastel), எஸ்ச்விஜ் (Eschwege), கோதா (Gotha).		
	எண்ணெய்க் கிடங்குகள்.-ப்ரமன் (Bremen), ஸ்டர்கிரேட் (Sterkrade), போட்ராப் (Bottrop), காஸ்டிராப் (Castrop), ராக்ஸல் (Rauxel), டார்ட்மெண்டு (Dortmund), கேமன் (Kamen), எம்ஸ் (Ems), கால்வாய்.		
	கப்பல் நிற்குமிடம்.—ஹாம்பர்க், **உலைகள், சாமான் கிடங்குகள்.**—ரூர் (Ruhr); ஹாலந்திலும், ஜெர்மனியிலும் 14 விமான நிலயங்கள்.	5 விமானங்கள்	1

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்
26—7—40	சாமான் சேமித்து வைத்திருக்கும் இடங்கள்.—மஸாவா, அஸாப், ராகிதா.		
	மோட்டார்கள்.-மோயாலே--பூனோரோட்		
	எண்ணெய்க் கிடங்குகள்.—செர்பரோ (Cherbourg), நான்டீஸ் (Nantes) and நாஸேர் (St. Nazaire).		
	ரயில் வண்டிகள் நிற்குமிடம்.—ஹாம் (Hamm).		
	மின்சார உற்பத்தி சாலை.—டார்ட்மண்டு (Dortmund).		
	விமான நிலயங்கள்.–ஷிபால் (Schipel), வால்ஹாவன் (Waalhaven), விரோதியின் சாமான்களை ஏற்றிச்செல்லும் கப்பல்.	1 விமானம்	6
27—7—40	North Holland.—நார்ட்ஸி (Nord-see) கால்வாய்.		..
	படகுகள்.—ஸ்டவோரென்.		
	எண்ணெய்க் கிடங்குகள்.—ஹாம்பர்க் (Hamburg), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).		
	கப்பல் நிற்குமிடங்கள்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), ப்ரமன் (Bremen). ஹாலந்திலும், ஜெர்மனியிலும் 8 விமான நிலயங்கள்.	நஷ்டமில்லை.	
	விரோதிக் கப்பல்கள்.—நார்வே (Norway) கடற்கரைக்கருகாமையிலும், டச்சு (Dutch) கடற்கரைக்கப்பாலும்.		
28—7—40	ஹாலந்திலும்; ஜெர்மனியிலும்.—எண்ணெய்க் கிடங்குகள், கப்பல் நிற்குமிடங்கள், சாமான் கிடங்குகள், 17-விமான நிலயங்கள், கிழக்கு லிபியா (Libya), இத்தாலிய கிழ் ஆப்ரிக்கா (Africa).	நஷ்டமில்லை.	7

தேதி.	எதிரி விமானப்படை யெடுப்பின் விவரங்கள்	எதிரிகளின் விமான நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
22—7—40	ஸ்காட்லாந்தி (Scotland)-ன் வடகிழக்குக் கடற்கரை, தேம்ஸ் (Thames) நதியின் முகத்துவாரம், தெற்கு வேல்ஸ் (Wales).		ஒரு வீடு சேதமடைந்தது. சொல்ப நஷ்டம்.
23—7—40	ஸ்காட்லாந்தி (Scotland)-ன் வடகிழக்கு கடற்கரை.	1 விமானம்.	
24—7—40	இங்கிலாந்தின் தென்கிழக்கு கடற்கரையில் உள்ள ஒரு பட்டணம், தென் மேற்கு இங்கிலாந்து, வேல்ஸ், தென்மேற்கு ஸ்காட்லாந்து. இரவு விமான நடவடிக்கை இல்லை.	12 விமானங்கள்.	சொல்ப சேதம்; சாவு மிகக் குறைவு.
	பாலஸ்தீனத்தி (Palestine)லுள்ள ஹைபா (Haifa).		46 மனிதர்கள் இறந்தனர். 88 பேருக்கு காயம்
25—7—40	பிரிடிஷ் கால்வாயில் இருக்கும் கப்பல்கள், இங்கிலாந்தின் தென்கிழக்கு, தென்மேற்கு கடற்கரை (சண்டை ஆரம்பித்ததிலிருந்து இதுதான் முதல் மும்முறமான வான் சண்டை).	28 விமானங்கள்.	5 விமானங்கள் நஷ்டம்
26—7—40	இங்கிலாந்தின் தென்மேற்கு பாகம், இன்னும் சில கடற்கரையோர பட்டணங்கள். வட அயர்லாந்துக்கருகே இருக்கும் கடலில் கப்பல்கள். (இந்த இடத்தில் எதிரி விமானம் தாக்கினது இது தான் முதல் தடவை.)	3 விமானங்கள்.	
	இரவில் :—தென்மேற்கு இங்கிலாந்து, வேல்ஸ், வடகிழக்கு ஸ்காட்லாந்து.	1 விமானம்.	சேதம் இல்லை.
	அலெக்ஸாண்டிரியா (Alexandria), ஜிப்ரால்டர் (Gibraltar), மர்ஸா மாத்ரூ (Mersa Matruh)-வில் இருக்கும் மராமத்து இலாகா.		ஒருவன் இறந்தான். பலபேருக்கு காயம்.

தேதி.	எதிரி விமானப்படை யெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
27—7—40	இங்கிலாந்தின் தெற்கு, தென் மேற்கு கடற்கரைகள், இங்கிலீஷ் கால்வாய், அலெக்ஸாண்டிரியா, மால்டா (Malta).	5 விமானங்கள்.	சொற்ப சேதம். ஒருவன் மாண்டான்.
28—7—40	இங்கிலீஷ் கால்வாய், இங்கிலாந்தின் தென்கிழக்கு கடற்கரை.	9 விமானங்கள்.	ஒரு ஆகாய விமானி உயிர் தப்பினன்.
	அலெக்ஸாண்டிரியா (Alexandria), மால்டா(Malta), ஏடன் (Aden).	4 விமானங்கள்.	ஒரு இந்திய விமானி கொல்லப்பட்டார்.
29—7—40	டோவர் (Dover) துறைமுகம், இங்கிலீஷ் கால்வாய் கரையோரம், வேல்ஸ் (Wales), தேம்ஸ் முகத்துவாரம், இங்கிலீஷ் கால்வாயில் சஞ்சரிக்கும் காவல் கப்பல்கள்.	22 விமானங்கள்.	சொற்ப சேதம்.
	மால்டா (Malta), ஏடன் (Aden), மத்தியதரைக் கடலில் ஒரு கப்பற்படை.	1 விமானம்.	அநேகம் சேதம்.

அனுபந்தம் I.

"இஸ்லாம் ரக்ஷகர்."

முஸோலினிக்கு "பான்டைன் (Pontaine) சதுப்புநிலங்களில் வசிக்கும் கொழுத்த ஆண் தவளை" என்று பட்டப்பெயர் உண்டு. இவர் வட ஆபிரிகாவில், இதாலியின் குடியேறு தேசமாகிய லிபியா (Libya)வுக்கு 1937-ம் ௵ மார்ச்சு மாதம் போனபோது, 'இஸ்லாம் ரக்ஷகர்', என்ற பட்டத்தை வகித்தார். அப்போது 'இஸ்லாம் கட்கம்' என்ற பெயர் கொண்ட வாள் ஒன்றும் இவருக்குக் கொடுக்கப்பட்டது. 'இஸ்லாம் கட்கத்தை' உருவிய கையோடு, குதிரைமேல் நிற்கும் பாவனையாக வார்க்கப்பட்ட முஸோலினியின் வெண்கலச்சிலையொன்றை ட்ரிபோலி (Tripoli) நகரத்தில் மார்ஷல் பால்போ (கவர்னர்) இதற்கு மறுவருஷம் திறந்து வைத்தார். ஆனால், வைத்துக்கொண்டிருக்கும் பட்டப்பெயருக்குத் தக்கபடி நடத்தையில்லை. இதாலியின் அரசுமுறை அராபியரை ரக்ஷிப்பதாகக்காணோம். இரக்கமில்லாமல், அராபியர்களை அடக்கி, அவர்களுடைய உடமைகளை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்வதுதான் நோக்கமாய் இருக்கிறது.

.. பெங்காஸி (Benghazi)க்கும், டெர்ணா (Derna)வுக்கும் நடுவிலுள்ள மேட்டுபூமி, லிபியா தேசத்தில், சுபிக்ஷமான இடம். இதாலியர்கள் இங்கு குடியேறுவதற்காக இங்கிருந்த அராபியர்களை விரட்டி விட்டார்கள். மேடு பள்ளமான, வறண்ட, ஒடுக்கமான, செடிகள் மழுங்கிப்போகும் இடங்களுக்கு அராபியர்களை மாற்றியிருக்கிறார்கள். இவர்களுக்கு விடப்பட்டிருக்கும் பூமி ஆளுக்கு 3½ ஏகரா தான்; எல்லாவற்றிற்கும் பெரிய பங்கு—12 ஏகர். ஆனால் முன்னைவிட இப்பொழுது அராபியர்களுக்கு அதிகமான வரும்படியென்று இதாலியர் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இவ்விதமாக, சுதேசிகளின் பாத்தியத்தை கவனியாது 100,000 இதாலியக் குடியானவர்களுக்கு லிபியாவில் மான்யம் விடப்பட்டிருக்கிறது.

1928 வருஷம் ஜூன் 7-ல் விதித்த சட்டத்தினுடைய முதல் பிரிவில், ட்ரிபோலி (Tripoli), ஸிரிநேகா (Cyrenaica) விலிருக்கும் ஸர்க்கார் இடங்களில் இதாலியர்கள் மட்டும்தான் குடியேறி, விவசாயம் செய்யலாமென்றும், கூலிவேலை, உழவுத் தொழில், ஆடு மாடு மேய்த்தல் முதலிய வேலைகளுக்கு மட்டும்தான் சுதேசிகள் லாயக்கென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

உள்ளூர் செய்திகள் வெளியே போகாதபடி சட்டங்கள் எவ்வளவோ லிபியாவில் விதிக்கப்பட்டிருந்தாலும் அயலார்கள் அங்கு சென்று சில விஷயங்களைத் தெரிந்துகொண்டு வந்துவிடுகிறார்கள். இவர்கள் சொல்வதிலிருந்து இதாலியர் எவ்வளவு மிருகத்தன்மையோடு அராபியர்களை அடக்கி, அவர்கள் நிலங்களைப் பிடுங்கிக்கொண்டிருக்கிறார்களென்று வெளியாகிறது.

1938ல் எலிஜபெத் மன்ரோ (Elizabeth Munroe), எழுதிய, ‘அரசியலும், மத்தியதரைக் கடலும்’ என்ற புத்தகத்தில் இதாலியரின் அக்கிரமங்களைப் பின் வருமாறு வர்ணிக்கிறுள் :—ஸிரிநேகா (Cyrenaica)வைப் பிடிக்கும்போது நடந்த கோரங்களை மகமதியர்கள் ஒருநாளும் மறக்கமாட்டார்கள். அல்ஜீரியாவிலிருந்த உலமா (Ulemas)களும், துனீஷ்யாவிலிருந்த டெஸ்டூர் (Destour) களும் ஸிரியாவில் ஒரு டாக்ஸி டிரைவரும், இரண்டொரு இஜிப்த்காரர்களும் இவைகளைப் பற்றிச் சொல்லக் கேட்டேன். எதியோபியா (Ethiopia)விலிருந்து இஜிப்த் பத்திரிகைகளுக்கு இதாலியர் நல்லவர்களென்ற கட்டுக் கதைகள் வந்துகொண்டு இருக்கின்றன. நாங்களதை நம்பமாட்டோமென்று இவர்கள் சொல்லுகிறுர்கள்.

சுயேச்சையைக் காப்பாற்றிக்கொள்ள அராபியர்கள் பலமாய் யுத்தம் செய்தார்கள். தோற்ற பிறகு ஜென்ரல் கிரேஸியானி ஸிரீநேகாவில் அராபியர்களைப் படுத்திய பாடு பயங்கரமானது. ஊர் தலைவர்களை விமானங்களிலிருந்து கீழே தள்ளி விட்டார்கள். ஜனங்களுக்கு முன்னிலையில் அவர்களை நிறுத்திக் கம்பால் அடித்தார்கள். ஆண், பெண், குழந்தைகள், ஆடு மாடுகள் தண்ணீர் இல்லாமலும், உணவில்லாமலும் சாகும்படி கிணறுகளையெல்லாம் காங்க்ரீட் (Concrete)டால் அடைத்துவிட்டார்கள். நாடோடி ஜாதியைச் சேர்ந்த இடையர்கள் அங்கு வசிக்கிறுர்கள். இவர்கள் இதாலியருக்கு பவ்யப்பட்ட பிறகுங்கூட மேய்ச்சல் குறைவான இடங்களில் வசிக்கச் சொல்லியதால், உணவில்லாமல் போய், அவர்களும், அவர்கள் கால்நடைகளுடன் இறந்தனர். ஸ்திரீகள் கற்பை அழித்தார்கள் ; அவர்களை வேசி கிரகங்களுக்கு அனுப்பிஞர்கள் ; உற்ருர் உறவினருக்கு ஆகாரம் போட்டதற்காகத் தூக்கிடப்பட்டார்கள். சில பெரிய பிரதேசங்களுக்குள் அராபியர்கள் வரக்கூடாதென்று விலக்கியிருக்கிறுர்கள். அதற்குள் வந்ததற்கும், இதாலிக்குக் கீழ்ப்படியாத சுற்றத்தாரோடு பேசிய சந்தேகத்துக்காகவும் அராபிய ஆண் மக்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறுர்கள். கௌரவம் வாய்ந்த பிரபுக்களைத் தோன்றியபடி கைதுசெய்து, ஜெயிலில்போட்டு, விலங்கிட்டு, கப்பலில் அசுத்தமான அறைகளிலடைத்து, தேசத்தைவிட்டு வெளியேற்றி இருக்கிறுர்கள். சுடப்பட்டவர்களெத்தனையோ, தூக்கிலிடப்பட்டவர்களெத்தனையோ, உணவின்றி இறந்த கைம்பெண்களும், குழந்தைகளும் எத்தனையோ, கடும் வெயிலில் உப்புக்களங்களி (ஏரிகளி)ல் வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப் பட்டவர்களெத்தனையோ, அராபிய புனருத்தாரண நோக்கத்தைக்கொண்டு, இபன் ஸவுத் (Ibn Saud) சேர்ந்திருக்கும் வாகாபி (Wahabi) வகுப்பைப்போல ஸிரேநேகா (Cyrenaica)வில் ஸெனௌஸி (Senoussi) என்ற வகுப்பு ஏற்பட்டு இருக்கிறது. இது இஸ்லாம் மதத்தைப் பரிசுத்தப்படுத்தச் செய்திருக்கும் ஏற்பாடு. இவர்களுடைய மசூதிகளையெல்லாம் மூடிவிட்டார்கள் ; இவர்கள் கொள்கைகளைப் போதிக்கக்கூடாதென்றும், மதாசாரங்களை அனுஷ்டிக்கக்கூடாதென்றும் தடுத்து விட்டார்கள். சுதேசிகளை இவ்வாறு சீர்கெடச் செய்துவிட்டால், இதாலிய நாகரீகம் விரைவில் உயர்ந்துவிடுமென்பது இதாலியரின் நோக்கம். இவ்விஷயங்கள், டென்மார்க்கு தேசத்தவரான நூட் ஹோம்போ (Knud Holmboe) நேரேபார்த்துச் சொல்ல நமக்குத் தெரிகிறது.

கீழே குறிப்பிட்டிருக்கும் சமாசாரங்களும் இவர் சொன்னவைகள் தான்.

"கிராமம் கிராமமாக எல்லா ஜனங்களையும் விஷக் காற்றால் கொன்றிருக்கிறார்கள். ஸிரேனேகாவில் நான் வசித்தபோது ஒவ்வொரு தினமும் 30 பேர்களை தூக்கில் போடுவார்கள்; தூக்கில் போடுமுன் இதாலியர்கள் இவர்களைக் காலால் உதைத்துத் திட்டுவார்கள்; தூக்கில் போடும்போது படம் (Photo) பிடிப்பார்கள். 'இதாலியருக்கு வலிமையதிகம் என்று ரூபிக்க ஊரிலுள்ளவர்களையெல்லாம் கொல்லவேண்டியிருக்கிறது' என்று ஒரு இதாலிய ராணுவஸ்தன் (Colonel) ஒரு சமயம் சொன்னான். டெர்னா (Derna)-விலிருந்த இதாலிய அதிகாரி (Commissioner) ஒருவர், 'அராபியர்கள் நம்மை எதிர்த்தால் நல்லதுதான். இவர்களைக் கொன்றுவிட்டு இவர்கள் நிலங்களை நாம் எடுத்துக்கொள்ளலாம். அராபியரைப் போன்ற அசுத்தப் பிராணிகளை அழித்துவிடவேண்டும். இவர்கள் உயிரோடிருப்பதால், நம்முடைய தேவைகள் கிடைக்காமல் போகின்றன" என்றார்.

அராபியர்களை அடியோடு ஒழித்துவிடுவதுதான் க்ரேஸ்யானி (Graziani)யின் நோக்கம். இதற்காக 1932-ல் 80,000 அராபியர்களை அவர்களுடைய கால்நடைகளோடு ஸிரேனேகாவிலிருந்து, கல்ப் அப் சிட்ரா (Gulf of Sidra) என்ற கடும் பாலைவனத்துக்குத் துரத்திவிட்டான். ஆயிரக்கணக்காய் அநேகர்கள் இஜிப்துக்கு ஓடிவிட்டார்கள். இவ்விதம் ஓடிவந்த 23,000 பேர்கள் ட்ரிபோலி (Tripoli)யில் இருக்கிறார்கள். யுத்தங்களில் இறந்தவர்களெத்தனையோ, ஊரைவிட்டு ஓடியவர்களெத்தனையோ; 1917-ம் வருஷத்துக்குப் பிறகு லிபியா, ஸென்ஸஸ் (Census) கணக்கில் ஸிரேனேகா ஜனத்தொகை பிரத்யேகமாகக் காட்டப்படவில்லை. ஆனால் ஜனத்தொகை சரி பாதி குறைந்து விட்டதாக மதிக்கவேண்டும். ஸிரேனேகா அராபியருக்குக் கால்நடைகள் தான் செல்வம். இவைகளை நாசம் செய்த அநியாயம், கீழ்குறிப்பிட்டிருக்கும் 1926, 1933 ஸென்ஸஸ் (Census) கணக்கிலிருந்து வெளிப்படும்:—

		1926	1933
ஆடு	...	800,000	98,000
வெள்ளாடு	...	70,000	25,000
காளைமாடு	...	10,600	8,700
ஒட்டகங்கள்	...	75,000	2,600
குதிரைகள்	...	14,000	1,000
கழுதைகள்	...	9,000	5,000

லிபியாவின் சுதேசிகளை இறக்கமில்லாது, அடியோடு ஒழித்துவிடுவது இதாலியின் நோக்கமாயிருக்கிறது. இதாலியின் கொடுங்கோலை தாங்கமுடியாமல் வெளியேறிய அராபிய பிரபுக்கள் அநேகர்கள் இதர நாடுகளில் வசிக்கிறார்கள்; இவர்கள் இதாலியரை விரட்டவும், திருப்பி ஹிம்சிக்கவும் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மனதில் துவேஷத்தை வைத்துக்கொண்டு, வெளியில் நல்லவன்போல் பாசாங்கு செய்து 'இஸ்லாம் ரக்ஷகர் என்று' பட்டம் தரித்துக் கொண்டதினால் உலகம் மயங்கிவிடாது. இதுவரையில் செய்திருக்கும் அநியாயங்களிலிருந்தே முஸோலினியை உலகம் மதிக்கும்.

அனுபந்தம் II.

யுத்த உபகரணங்கள் செய்ய இந்தியாவில் தீவிர முயற்சி

உணவுப்பொருள்களையும் யுத்த தளவாடங்களையும் சேர்த்து ஜெர்மனிக்குத் திரட்ட முடியவில்லை. இது இந்தியாவுக்கு சாத்தியம்.

(டைம்ஸ் ஆப் இந்தியா இல்லஸ்டிரேடட் வீக்கிலியிலிருந்து பத்திராதிபர் சம்மதத்தின்பேரில், எடுத்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

சுமார் 120 வருஷங்களுக்குமுன் இந்தியாவில் ஸிந்தியாவென்ற பிரபல சேனாதிபதியிருந்தார். அவர்காலத்தில், போர்முனைக்குப் போவதற்குமுன் முஸ்தீபுகள் தயார் செய்த விமரிசையை பின்வருமாறு சுற்றுப்பிரயாணி ஒருவர் எழுதுகிறார்:—

"அசப்பில் பார்த்தால், ஏதோ ஒரு, அல்லது சில, கிராமங்கள் புதிதாக கிளம்பியதாகத்தோன்றும்; உற்றுப்பார்த்தால், பல கூடாரங்களும், பந்தல்களும், கொடிகளும் பாவுட்டாக்களும், வரிசை வரிசையாகக் குடிசைகளும், குவியல் குவியலாக தளவாடங்களும், ஒரு இடத்தில் பீரங்கிக்கும்பலும், மற்றொரு வெளியில் கட்டிய குதிரைகளும், பெரிய கஜங்களும் புலப்படும். குதிரைகளின் கனைப்பு, யானைகளின் முழக்கம், தம்பட்ட ஓசை, பீரங்கிவேட்டு, தொழிலாளிகளின் ஆரவாரம்—ஆகிய பலவித சப்தங்களிலிருந்து யுத்தத் தயாரிப்பு நடக்கிறதென்று ஊகிக்கக்கூடும்."

ஆனால், அக்காலத்துத் தயாரிப்பெல்லாம் ஒரு சிறு இடத்தில் சைன்யங்கள் பார்வையிலேயே நடந்தன. கால் நடையாய்ச்சென்று இரண்டொரு நாழிகையில் எல்லாவற்றையும் பார்த்துத்திரும்பிவிடலாம்: ராணுவங்கள் நேரே பார்த்து உற்சாகமடைந்தன.

இக்காலத்திலோ ஊருக்கு ஊர் தளவாடங்கள் தயாரிக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் நேரே பார்க்கவேண்டுமானால் தூரதிருஷ்டி கண்களும், மந்திர விமானங்களும் வேண்டும்.

ஸிந்தியா மஹாராஜா, அவர் காலத்துக்குப் பெரிய சேனாபதிதான்; ஆனால் அவருக்கு வேண்டிய உபகரணங்களெல்லாம் ஏதோ சில கொல்லுப்பட்டறைகளில் தட்டி நீட்டிச் செய்துவிடலாம். இப்பொழுதோ, பெரிய தொழிற்சாலைகளில், கோடிக்கணக்கான குண்டுகளும், இலக்ஷ கஜ (yards) கணக்கான வஸ்திரமும், ஆயிரக்கணக்கான ஜோடும், சாதாரண யந்திரத் துப்பாக்கிகளும் செய்தாக வேண்டும். இவைகளை நேரில் பார்க்கமுடியாது; ஆனால் செய்தாகின்றன.

"தொழிலபிவிருத்திக் குறைவால் தளவாடங்கள் இந்தியாவில் செய்ய முடியவில்லை என்று, சென்ற ஸெப்டம்பர் மாதம் இந்திய சேனாபதி ஒலி பரப்பியிருக்க, 10 மாதங்களுக்குள் 100-க்கு 90 தளவாடங்கள் தயாராயிருப்பது விந்தைதான். சிறிய, பெரிய, 6 இஞ்சு பீரங்கிகள் வார்க்கப்பட்டிருக்கின்றன. சீக்கிரத்தில் மோட்டார் வண்டிகளும், விமானங்களும், கப்பல்களும் கட்டப்படும்."

"முன்னைவிட 7 பங்கு அதிகமாய் வெடிமருந்தும், 12 பங்கு அதிகமாய் வெடிகுண்டுகளும் தயாராகின்றன; சென்ற மஹா யுத்தக் கடைசி வருஷத்தில் செய்ததைக்காட்டிலும் இப்பொழுது தயாரிப்பது வெகு அதிகம்; இவையெல்லாம் 9 மாதங்களில் ஏற்பட்ட அபிவிருத்தி"

என்று, சமீபத்தில் சேனாபதி மற்றொரு ஒலி பரப்பில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்த ஒலி பரப்புக்குப் பிற்பாடு, தொழிற்சாலைகளை அதிகப்படுத்தவும், தளவாடங்கள் செய்யவும் 7 கோடி ரூபாய் சாங்கிஷனாயிருக்கிறது. ஆகவே, முன்னைவிட யந்திர பீரங்கிகள் இரண்டு பங்கும், இதர பீரங்கிகளும், துப்பாக்கிகளும் இரண்டு பங்குக்கு அதிகமாகவும் செய்யப்படும். ஆழத்தில் வெடிக்கும் கடல் வெடிகளும் செய்யப்படும்.

சில யந்திரங்கள் வெளியேயிருந்து வந்தாலும், இந்திய விளை பொருள்களைக் கொண்டே இந்திய தொழிற்சாலைகளிலேயே மேற்சொன்னவைகளெல்லாம் தயாரிக்கப்படும்.

புதிதாய் சேர்க்கப்பட்டிருக்கும் (ஒரு லக்ஷ) சைன்யத்துக்கும், இனி ஏற்படப் போகும் சைன்யங்களுக்கும் உடுப்பு, பூட்ஸ் (Boots) செய்ய, தொழிற்சாலைகளை அதிகப்படுத்தி, மேலும் மாதம் ஒன்றுக்கு 1,25,000 பூட்ஸ்கள் வீதம் பிரிடனுக்கு விற்கவும் ஏற்பாடாகிறது.

தொழில் குறைவு இருந்த நமக்கு, இதுவே பெரிய அபிவிருத்தியாகும்.

இரும்பு (எஃகு) உருக்கும் தொழிலைப்பாருங்கள். நமது பாதுகாப்புக்கு வேண்டியதோடு, 40 லக்ஷ ரூபாய் விலையுள்ள எஃகை, (இரும்பு இணைத்துக்கட்டும் வீடுகளுக்காக) இஜிப்துக்கு விற்க தயாராய்க்கொண்டுவருகிறது.

உடுப்புத்தைக்க கோடி கோடி கஜ (yard) வஸ்திரம், நெசவு சாலைகளில் நெய்யப்படுகிறது. விமானங்களிலிருந்து போடும் குண்டுகளைத் தாங்க மணல் மூட்டைகள், நமக்கும் கண்டு, வெளியேயுமனுப்பப்பட்டிருக்கின்றன; யுத்தம் ஆரம்பித்த 8 வாரங்களுக்குள் 11 கோடி ரூபாய்க்கு மணல் மூட்டைகள் வங்காள (Bengal) மாகாணம் அனுப்பியிருக்கிறது.

சாதாரணமாக, தெரிந்த கடைகளில்தான், எவரும், தங்களுக்குவேண்டிய சாமான்களை வாங்குவார்கள். புதிதாக ஒன்றைச் செய்தாலும் நம்பி வாங்க மாட்டார்கள். ஆனால் இப்பொழுதிருக்கும் நெருக்கடியில் புது தளவாடங்களை செய்ய நம்மைக் கேட்கிறார்கள். இதிலிருந்து கைத்தொழில்கள் புதிதாக ஏற்பட்டிருக்கின்றன. யுத்தம் முடிந்த பிறகு இந்த கைத்தொழில்கள் நிற்கமாட்டா.

உதாரணமாக:—பருத்திநூல் பன்னாடை (Cellular cotton cloth)-க்குக் கிராக்கியேற்பட்டு, நம்மை பரீக்ஷார்த்தமாய் செய்யச்சொல்ல, மாக் லெனோ (Mock leno) என்ற ரகம் செய்யப்பட்டது. இது திருப்திகரமாயிருந்ததால் 24 லக்ஷ ரூபாய்க்கு ஆர்டர் கிடைத்திருக்கிறது.

சணல் கித்தானுக்குப் பதிலாக துணிக்கித்தான் (Cotton duck Canvas) எண்ணெய்ச்சீலை (Water-proof, tarpauline) முதலானவைகளைச் செய்கிறோம்; இவைகளைச்செய்ய 47 லக்ஷ ரூபாய் ஆர்டர் கிடைத்திருக்கிறது.

டெலிபோன் (Telephone)களும், மின்சார விசிறிகளு (Electric fans))-ம் செய்கிறோம். 2,300 விசிறிகளுக்கு இஜிப்திலிருந்து ஆர்டர் வந்திருக்கிறது. கம்பியால் செய்த வலைகளைப்பரப்பி, ரஸ்தாக்கள் இப்பொழுது போடப்படுகின்றன. இவைகளையும் நாம் செய்கிறோம்.

இவ்விதமாக 100-க்கு 90 தளவாடங்கள் நாமே செய்கிறோம். மோட்டார் கார், விமானம், கப்பல் இவைகளைக்கட்டும்போது இந்தக்கணக்கு இன்னுமதிகமாகும். ஆனால் எல்லா உபகரணங்களையும் நாமே செய்துவிடமுடியாது. அவ்விதம் செய்ய முயற்சித்த உன்மத்தம்பிடித்த ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் கூட, இது சாத்தியமில்லாமல் போயிற்று. பெரிய தேசங்களான ரஷியா, அமெரிக்கா (U. S. A.)-வுக்குங்கூட முடியாது.

நடப்பு யுத்தம் முடிவதற்குள்ளேயே, பிறர் கையை பார்க்காது சொந்தத்திலே வேண்டியவைகளை வெகுவாய் நாம் செய்துகொள்ளக்கூடும். ஜெர்மனியில் உணவுப்பொருள்களை பயிரிடுவதைக் குறைத்துக்கொண்டு பீரங்கி செய்தார்கள். நாம் வேளாண்மையையும், யுத்த தயாரிப்பையும் சேர்த்துச் செய்துவிட்டோம். விளைந்திருக்கும் தான்யம் நமக்குக்கண்டு பிறருக்கும் மிஞ்சும்; ஒரு சமயம் நமக்கு ஆபத்துவந்தால் பிறர் கையைப் பார்க்காது சமாளித்துக்கொள்ளலாம். நேற்றுவரை கைத்தொழில் கம்மியாயிருந்த நாம், வெகுவிரைவாக இவ்வளவு முன்னேறியது விந்தையே.

யுத்த தளவாடம் செய்வதற்குவேண்டிய தாதுப் பொருள்களும், விளைபொருள்களும், வேறு எந்த தேசத்தைக்காட்டிலும் நம்மிடத்தில் அதிகமாக விளைகின்றன; இப்படிச் சொல்லுவது மிகையல்ல. இப்பொருள்களாவன:—இரும்பு, மாங்கனீஸ் (Manganese), நிலக்கரி, பெட்ரோலியம் (Petroleum) தாமிரம், க்ரோமைட் (Chromite), இல்மனைட்(Ilmenite), பாக்ஸைட் (Bauxite), அபரகம் (Mica), டங்க்ஸ்டன் (Tungsten) (இது பர்மாவில் விளைகிறது); ரப்பர்,

பருத்தி, சணல், எண்ணெய்கள்; கம்பளிநூல், தோல், சர்க்கரை, மரம், கரி (இது விஷக்காற்று பாதுகாப்பு முகமூடிகள் செய்ய உபயோகப்படும்). பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்திலேயே இரும்பு விளைவதில் இந்தியா இரண்டாவது நாடாகும்; அமெரிக்கா (U. S. A.)-விலிருக்கும் இரும்பில் முக்கால்பங்கு இங்கு இருக்கிறது. எஃகு செய்ய முக்கிய தாதுவாகிய மாங்கனீஸ் (Manganese) உற்பத்தியில் இந்தியா உலகத்தில் இரண்டாவது நாடு. மத்திய மாகாணம் (C. P.), அஸ்ஸாம் (Assam)-ஆகிய இரண்டு பிரதேசங்களிலுமே ஏராளமான நிலக்கரி அகப்படுகிறது. ரப்பர் முதலியவை உஷ்ண தேசத்தில்தான் விளையும். குளிர் தேசங்கள் இவைகளை நம்மிடமிருந்து வாங்கவேண்டும்; இச்சரக்குகள் நமக்கு ஏராளமாக விளைகின்றன. தோல், கம்பளி வகையரா, குளிர்தேசங்களில் போதுமானவரை இல்லை; நமக்குக்கண்டு மிஞ்சும்.

இவைகளை அறிந்துதான், "இந்திய சைன்யங்களை தற்காலத்திய யுத்தத் திக்குத்தக்கபடி சீர்திருத்துவதை முதற்காரியமாக்கி, அதோடு, முக்கியமான யுத்தத் தளவாடங்களையெல்லாம் கூடியவரையில் இந்தியாவிலேயே செய்ய வேண்டும்," என்று சென்றவருஷம் சாட்பீல்டு கமிடியார் (Chatfield Committee) சிபார்சு செய்தார்கள்.

சிபார்சுப்படியே, ஒரு வருஷத்துக்குள்ளாக, நமக்குவேண்டியவைகளையும் செய்துகொண்டு, உபரியாக மத்திய கீழ்நாடு (Middle East), மலயா (Malaya), ஹாங்காங் (Hong Kong) தேசங்களுக்கும் அனுப்புகிறோம். இந்த நாடுகள் விசேஷமாக நம்மிடத்தில்தான் வாங்குகின்றன. விற்றிருக்கும் தளவாடக் கணக்கு:—துப்பாக்கித்தோட்டா—75,000,000; வெடிகுண்டு (Shells)—200,000; துப்பாக்கி—6,000; கூடாரம்—8,500; மணல் மூட்டை—4,500,000; காகி டிரில் (Khaki drill)—3,000,000-கஜம்; பனியனுடை—10,000; போர்வை—600,000; பூட்ஸ் (Boots)–150,000-ஜோடி; போர்வைச்சட்டை (Great coat)–20,000, தரை விரிப்பு (Ground sheets)—73,000; சேணம் (Saddle)—17,000.

ஏற்றுமதியாகும் இதர கைத்தொழில் ஸாமான்கள்:—பான்டேஜ் (Bandage) துணி, சாயம், வார்னிஷ், தார் (ரஸ்தாவுக்கு), கம்பி (Cable), (காந்த கடல் வெடிகளி (Magnetic mines)-லிருந்து, தப்ப கப்பல்களுக்கு பட்டம் பிடிக்க மேற்சொன்ன கம்பி உபயோகமானது).

நாம் தயாரிக்கும் தளவாடங்களை விசேஷமாக இஜிப்த் வாங்கிக்கொள்ளுகிறது. இதுவரை 85-லக்ஷ ரூபாய்க்கு ஆர்டர்கள் வந்து 44-லக்ஷ ரூபாய் வேலை முடிந்துவிட்டது.

இந்தக்காரணங்களைக் கொண்டுதான், "இந்தியாவானது, தனக்குத் தேவையான யுத்த ஸமஸ்தசஸ்திரங்களையும் செய்துகொண்டு, உபரியாக தனக்காக போர் புரியும் ஐரோப்பிய நேயர்களுக்கும் அனுப்புகிறது" என்று மேஜர் ஜெனரல் மோல்ஸ்வொர்த் (Major General Molesworth) சென்ற மாதம் ஒலிபரப்பினார்.

மின்னலைப்போல் அதிவேகமாய் நமது தொழில்கள் அபிவிருத்தியாயிருக் கின்றன. இப்பொழுது ஸாங்கிஷனாயிருக்கிற 7-கோடி ரூபாய் திட்டம் அமுலுக்கு வரும்போது, அபிவிருத்தி இன்னும் ஆச்சரியகரமாயிருக்கும். பம்பாயில் மோட்டார் வண்டிகள், பங்களூரில் விமானங்கள், விசாகப்பட்டணத்தில் கப்பல் கள் கட்ட ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. தவிர, கடற்காவல் மோட்டார் படகுகள் (Motor launches) கட்டவும் உத்தேசமிருக்கிறது. இவைகளின் பாகங்கள் (Parts) சில வெளியிலிருந்து இப்பொழுது வாங்கவேண்டியிருந்தாலும், போகப்போக முழு பாகத்தையும் இந்தியாவிலேயே செய்வதாக உத்தேசம்.

மேற்சொன்னதெல்லாம் தஸ்தாவேஜிலிருந்து எடுத்த நடப்புகளேயொழிய கற்பனையொன்றுமில்லை. இந்த யுத்தத்தில் எதிர்பாராது ஏற்பட்ட சம்பவங் களில் இந்தியத் தொழில் அபிவிருத்தியொன்று. இது ஹிட்லர் காலகூட விஷத்திற் பிறந்த நன்மையாகும். உலகத்திலேயே நன்மையில்லாத கேடு கிடையாது. 10-மாதங்களுக்கு முன்னால் யாராவது தொழில் அபிவிருத்தி இவ்வளவு அபரிமிதமாய் இந்தியாவில் ஏற்படுமென்று சொல்லியிருந்தால், 'இது கனவு, 10-வருஷங்களில்கூட முடியாதகாரியம்' என்றிருப்பார்கள். இம் முன்னேற்றத்தால் பல நன்மைகள் ஏற்படப்போகின்றன. படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் பல வழிகளில் பிழைப்பு ஏற்படப்போகிறது. இந்தியா தொழில் சாமர்த்தியம் வாய்ந்தநாடு. பழைய திறமையெல்லாம் புதுவழியில் திரும்பப்போகிறது. இந்திய சீர்திருத்த கக்ஷிகளெல்லாம் 50-வருஷங்களாக கண்டுகொண்டிருக்கும் ஸ்வப்நமுமிதுதான்.

அனுபந்தம் III.

A.—ஜெர்மன் பொய்கள்.

குறிப்பு :—இவைகள் ஜெர்மனியிலிருந்து கீழேகண்ட தேதிகளில் ஒலி பரப்பப்பட்டு வந்த செய்திகள். ஒவ்வொன்றின் கீழும், அது ஏன் பொய் பிரசாரம் என்று எடுத்துக்காட்டி கண்டனம் செய்யப் பட்டிருக்கிறது.

9—7—40.

1. பிரான்ஸில் யுத்தம் நடந்தபோது, பிரெஞ்சுத்துருப்புகள் பின் வாங்கியதோடு, ஊர் ஜனங்களும் பாதைகளை அடைத்துக்கொண்டு கும்பல் கும்பலாக ஓட ஆரம்பித்தார்கள். கும்பல்களுக்குள்ளே பிரெஞ்சு சிப்பாய்கள் ஒளிந்துகொண்டார்கள். இவர்களில் சிலர், ஒளிந்தபடியே, ஜெர்மன் சிப்பாய்களைச்சுட, அவர்கள் திருப்பிச் சுட்டார்கள். இதனால் பயந்தோடும் ஊர்ஜனங்களுக்குள் திகில் ஏற்பட்டு, அநேக ஸ்திரீகளும், குழந்தைகளும் இறக்கவும், பலர் காயப்படவும் நேரிட்டது.

குறிப்பு :—(i) ஜெர்மானியர் படுத்திய பாட்டினால் ஊர்விட்டு 600-லக்ஷம் ஜனங்கள் வெளியேறினதால் ரஸ்தாக்கள் அடைபட்டு பிரெஞ்சு சைன்யங்களுக்கு போக இடமில்லாது தோல்வியடைந்தன.

(ii) ஜெர்மன் விமானிகள், ஓடுகிறவர்கள் மேல் சுட்டார்களே ஒழிய அவர்களைக்காப்பாற்றவில்லை.

(iii) பிரெஞ்சு சிப்பாய்கள் ஏன் சுட்டார்கள்? அவர்கள்தான் பயந்து ஒளிந்தவர்களாயிற்றே.

(iv) ஓடிய ஊரார்களை ஜெர்மானியர் ஹிம்ஸித்தது உண்மை. அதை மறைக்க இந்தப் பொய்களையெல்லாம் சொல்லுகிறார்கள்.

2. ஜெர்மன் நீர் முழுகிகளு (Submarines)டையவும், விமானங்களுடையவும் வெற்றி பிரதாபத்தை தென் அமெரிக்க பத்திரிகை யூனிவர்ஸல் (Universal) எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பு :—பிரதாபத்துக்குக் காரணத்தைக் காணோம். அவைகள் செய்யும் அக்கிரமங்களும், அவைகள் ஏராளமாக உடைந்து போவதும் தான் நாமறிந்தது :—

(i) அரண்டோரா ஸ்டார் (Arandora Star) என்ற வியாபாரக் கப்பலை உடைத்துவிட, அதிலிருந்த 1,843 ஜெர்மானியரும் 470 இதாலியரும் மாண்டார்கள்.

(ii) 5 ஜெர்மன் 'யூ' கப்பல்கள் (U-boats) 5 நாட்களில் சென்ற மாதம் மூழ்கப்பட்டன.

(iii) இரண்டு நாட்களில் 15 ஜெர்மன் விமானங்களும் நாசமாயின.

3. *ஜெர்மன் விமானிகள், இங்கிலாந்துமேல், நாள் தவறாது படை எடுக்கிறார்கள்.*

குறிப்பு :—ஆம். ஜெர்மன் விமானி ஒருவன், விமானக்குடை (Parachute) யால் கீழிறங்க, மிஸ்ஸஸ் நார்மன் கார்ட்வெல் (Mrs. Norman Cardwell) என்ற ஒரு ஆங்கில ஸ்திரீ, ஆயுதங்களைப் பிடுங்கிக் கொண்டு, அவனை வீட்டில் அடைத்துவிட்டாள். இதுதான் படையெடுத்ததின் முடிவு.

4. *இங்கிலீஷ்காரர்கள் மனப்பான்மை என்னவென்றால், முதலில் கக்ஷிப் பிரதிகக்ஷிகளைக் கேட்டு, ஒரு முடிவுக்கு வந்து, பிறகு, தங்கள் அபிப்பிராயத்தை மாற்றவே மாட்டார்கள்.*

குறிப்பு :—அப்படியானால், ஜெர்மனி (டாக்டர் கோயபல்ஸ்) இவர்கள் மனதைமாற்ற பிரசாரம்செய்யச் செலவுசெய்யும் பணமெல்லாம் வீண்தானே?

5. *பெடிடாபினோ* (Petit Dauphinois) *என்ற பிரெஞ்சுப் பத்திரிகை ஓரானி* (Oran)*-ல் நடந்த சண்டையைப்பற்றி தலை அங்கத்தில் சர்ச்சை செய்கிறது.*

குறிப்பு :—பிரான்ஸ், போலண்டு, ஹாலண்டு, பெல்ஜியம் நாடுகளில் சேர்ந்த பத்திரிகைகள் இப்பொழுது கிடையாது. ஜெர்மன் அபிப்பிராயங்களை தங்கள் அபிப்பிராயங்களாக எழுதுகிற பத்திரிகைகள் தான் உண்டு. நடப்பை உள்ளபடி ஜாடையாய்ச் சொன்ன இரண்டு ஹாலண்டு பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன.

6. *பவுனு (இங்கிலீஷ் பணம்)க்கு ஐரோப்பாவில் இப்பொழுது மதிப்பு இல்லை. மார்கு (ஜெர்மன் பணம்)க்கு மதிப்பு ஏறுகிறது.*

குறிப்பு :—அப்படியானால், போலண்டு (Poland), பால்கன்ஸ் (Balkans), ஸ்பெயின் (Spain) நாடுகளில் போய் நோட் (Notes) அடிப்பானேன் (ஜெர்மன் அச்சுக்கூடங்களில்)?

10—7—40.

7. *கேப் ஸ்பார்ட்வென்டே* (Cape Spartevente)*க்கு தெற்கே, செவ்வாய்க்கிழமை, பிரிடிஷ், இதாலியக் கப்பல்கள் கைகலந்தன. இதாலிய சண்டை விமானங்களும் சேர்ந்துகொண்டன. 6½ மணி நேரம் யுத்தம் நடந்தது. முடிவில் இதாலிய கப்பல்கள் விரட்ட, பிரிடிஷ் கப்பல்கள் பின்வாங்கின.*

குறிப்பு :—சண்டை நடந்தது 15-நிமிஷங்கள்தான். ஓடிக்கொண்டே, இதாலியக்கப்பல்கள் தாக்கின. அவைகளில் இரண்டு சேதம்,

முடிவில் பயந்து, முதுகுகாட்டி, பீரங்கிகளால் காக்கப்படும் 4-துறைமுகங்களுக்குள்போய் பதுங்கிக்கொண்டன. கையில் அகப்படாது, எதிரி ஓடிவிட்டதில் பிரிடிஷ் கடற்படைக்கு மனக்குறை அதிகம். இதுதான் நடப்பு.

8. *ஸ்டாவென்ஜர் (Stavanger) ஊரின்மேல் படையெடுத்த 12 பிரிடிஷ் விமானங்களும் சுட்டுத் தள்ளப்பட்டன.*

குறிப்பு :—இந்தச்செய்தி முதலில் பேர்ஸியன் (பாஷை) ஒலிபரப்பில் வந்தது. அதே நாள், ஹிந்துஸ்தானி (பாஷை) ஒலிபரப்பில், "12-விமானங்கள் படையெடுக்கப்பார்த்தன. முடியாமல் ஓடி விட்டன" என்று சொல்லப்பட்டது. விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டனவா அல்லது ஓடிப்போயினவா? எது உண்மை?

11—7—40.

9. *மத்தியதரை (Mediterranean) கடலில் மத்தியபாகத்தில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களைக்கண்டதும், இவைகளை நாசம் செய்ய, இதாலிய யுத்தக் கப்பல்கள் புறப்பட்டன.*

குறிப்பு :—புறப்பட்டது சரி: காரியத்திலென்ன ?

10. *1,00,000 டன் நிறையுள்ள பிரிடிஷ் வியாபாரக்கப்பல்கள் வாரா வாரம் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. கடல் வெடிகளால் ஏற்படும் சேதத்தை இந்த கணக்கில் சேர்க்கவில்லை. மொத்தத்தில் ஜெர்மன் யுத்தக் கப்பல்களாலும், விமானங்களாலும், பிரிடனுக்கு ஏற்பட்ட சேதம் இதுவரை 30,00,000 டன்கள்.*

குறிப்பு :—ஜெர்மனிக்குச் சேதம் 877,000 டன்கள்; இதாலிக்கு 244,000 டன்கள்—மொத்தம் 1,121,000 டன்கள். இவர்கள் இருவர்களுடைய நஷ்டங்களைக்கூட்டிய தொகைக்கு, பிரிடிஷ் நஷ்டத்தொகை குறைவானது.

11. *வெளிப்படையாகவோ, ரகஸ்யமாகவோ இதுவரையில் இந்தியர்கள் செய்த உதவியை, பிரிடன்மேல் ஜெர்மனி படையெடுக்குமுன், நிறுத்திவிட வேண்டுமென்று இதனால் எச்சரிக்கை செய்யப்படுகிறது.*

குறிப்பு :—தட்டிக்கொடுத்து பார்த்தாய்விட்டது; இப்பொழுது பயமுறுத்திப் பார்க்கிறது. "ஹிட்லரையாவது, அல்லது அவருடைய ராஜ்ய தந்திரத்தையாவது இந்தியத் தலைவர்களெவரும் புகழ்ந்தது இல்லை. யாராவது இருந்தால் சொல்லட்டும். ஜெர்மனி கையில் அகப்பட்டுக்கொண்டால், கதி என்னவென்று இந்தியர்களுக்கு நன்ருய்த் தெரியும்", என்று ஜூலை 12ல் லாகூரில் மிஸ்டர் M. L. சாவ்லா (Chawla) ஒலிபரப்பியிருக்கிறுர்.

12—7—40.

12. ஜெர்மன் சிப்பாய்கள் மிருகத்தன்மையுள்ளவர்களென்ற நினைப்பெல்லாம் மாறிவிட்டது. ஓடிவந்த பிரெஞ்சு ஜனங்களுக்கு, இவர்கள் நல்ல யோசனைகளைக்கூறி ; பலவித உதவிகளையும் செய்திருக்கிறார்கள். இதிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் இவர்களை விசுவாஸிக்கிறார்கள் ; அனுதாபம் காட்டுகிறார்கள். (ஸூயிஸி (Suisse) பத்திரிகையில் பாரிஸ் நிருபர் எழுதியது.)

குறிப்பு :—இதெல்லாம் பொய். நடப்பு பின்வருமாறு :—'பிரெஞ்சுக்காரர்கள் பாங்கில் பணம் போடக்கூடாது : பாங்கில் கணக்குகூட இருக்கக்கூடாது ; பங்குத் தொகைகள் (Shares), ஜெர்மானியர் சொன்ன விகிதப்படி வைத்துக்கொள்ளவேண்டும் ; ஜெர்மன் அதிகாரிகள் முன்னிலையில்தான் கஜானாவிலிருந்து டெபாஸிட் (Deposit)டுகளை எடுக்கவேண்டும்.

13. பிரிடிஷ் கொடுமைகளுக்குள்ளான பிரெஞ்சு மாலுமிகளை ஓரானி (Oran)ல் பார்த்தோம். அவர்கள் கஷ்டங்கள் எங்கள் மனதைப் பிளந்தன ; எங்கள் அனுதாபத்தைக் காட்டினோம்.

குறிப்பு :—அப்படியொன்றும் நடக்கவில்லை. ஜெர்மானியர் செய்த அக்கிரமம் ஒன்றை இங்கு எடுத்துக் காட்டுவோம். இது ஜெர்மன் விமான இலாகா தலைவர் கோரிங்கி 27—5—40ல் போட்ட உத்தரவு. "பிரேஞ்சு விமானிகள் ஜெர்மானியர் கையில் அகப்பட்டுக்கொண்டால், அவர்களுக்கு விலங்குகள் போட்டு, சிறையில் வைத்து, உணவுப் படி முதலியவற்றை குறைக்க வேண்டும். கொல்லப்பட்ட ஜெர்மன் பாரசூட் (விமானக் குடைச்) சிப்பாய் ஒவ்வொருவனுக்கு பதிலாக, பிரேஞ்சு விமானிகளில் 50 பேர்களை சுட்டுவிடவேண்டும்." இதெல்லாம் மனதைப் பிளக்கும் செய்தி அல்லவா ; அனுதாபம் காட்டியது எப்படி ?

13—7—40.

14. (i) பலியாரிக் (Balearic) தீவுகளுக்குக் கிழக்கே இதாலிய கப்பல்களால் எதிர்க்கப்பட்டு பிரிடிஷ் யுத்தக் கப்பல் ஹூட் (Hood) பழுதாய்ப் போய் விட்டது ; பழுதுபார்த்து வெளிவர நாள் பிடிக்கும் (இது இதாலி பத்திரிகை Corriera della Serraவின் செய்தி).

(ii) மத்தியதரைக்கடல் சண்டையில் அடிபட்ட பிரிடிஷ் கப்பல்கள் ஜிப்ரால்டர் துறைமுகத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன. பெரிய விமானக்

குண்டுகள் விழுந்த கப்பல்களில் ஒன்று ஹுட் (Hood), மற்றொன்று ஆர்க் ராயல் (Ark Royal) (இது ஸ்பெயினிலிருந்து வந்த செய்தி).

குறிப்பு :—இது ஜூலை 9ல் நடந்த சண்டை. சில குண்டுகள் இந்த கப்பல்களுக்கு அருகாமையில் விழுந்தனவே அல்லாது, மேலே ஒன்றும் விழவில்லை; சேதமுமில்லை. ஜூலை 7ல் நடந்த ஓரான் (Oran) சண்டையில் 'ஹுட்' பலமாய் அடிபட்டதனால், வெளிக்கிளம்பாதென்று ஜெர்மானியர்கள் சொன்ன இரண்டு நாட்களுக்கெல்லாம் சண்டைக்கு மறுபடியும் வெளி வந்தது; இனியும் தேவையானபோது வரும்.

ஆர்க் ராயலை (Ark Royal)ப் பற்றிப் பேசுவதே ஜெர்மானியருக்கு அவமானம். இதை உடைத்துவிட்டதாக ஜெர்மன் விமானி L/Cpl. பிராங்கி (Francke) க்கு பதக்கப் (Iron Cross) பரிசு ஒரு சமயம் கொடுக்கப்பட்டது; பிறகு இதே கப்பலை அமிழ்த்தி விட்டதாக ஜெர்மன் சண்டைக்கப்பல் (U-boat) ஒன்று சொல்லிக்கொண்டது. மூன்றாவதாக; இது சேதமாகவில்லை, ஜெர்மன் கிராப்ஸ்பீ (Graf Spee) கப்பலை ஒளிந்து பிடிக்க மான்டிவிடியோவு (Montevideo)க்கப்பால் ஓரிடத்தில் இருப்பதாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

15. *போர்டு (Ford) கம்பெனியைப்போலவே பாகார்ட் (Packard) கம்பெனியும் விமான இன்ஜின்களை பிரிடனுக்குச் செய்துகொடுக்க சம்மதிக்கவில்லை. பிரிடனுக்கு வாங்கப் பணமுமில்லையென்று அமெரிக்காவில் பெரிய வியாபாரிகள் கருதுகிறார்கள். பிரிடனுக்கு சரக்குகள் போகாதபடி எதிரி வளைத்துக் கொண்டிருக்கிறான். ராஜீய தந்திரங்களிலும், சைன்யங்களிலும், உதவியில்லாது பிரிடன் தனித்து நிற்கிறது.*

குறிப்பு :—பாகார்ட் (Packard) கம்பெனி, ஐக்கிய நாட்டு (U. S. A)க்கும், பிரிடனுக்கும் 9,000 விமான இன்ஜின்கள் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. இது ஜூலை 12ல் United States Defence Commission ஆல் வெளியிடப்பட்ட செய்தி.

14—7—40.

16. *ஜெர்மனி எப்பொழுது படையெடுக்குமோவென்று நினைத்துக் கொண்டே பிரிடன் நாளைத்தள்ளுகிறது. ஆனால் ஹிட்லர் நிர்ணயித்தபோது தானே படையெடுக்க நேரிடும்.*

குறிப்பு :—காலத்தைத்தான் ஹிட்லர் நிர்ணயிக்கலாம்: ஜயம் அவர் கையிலில்லை.

17. சென்ற 6 வாரங்களில் பிரிடனுக்கு 6,09,000 டன்கொண்ட வியாபாரக் கப்பல்கள் போய்விட்டதினால் திண்டாட்டம் வந்துவிட்டது. (ஜெர்மன் ராணுவ இலாகா செய்தி).

குறிப்பு:—யுத்த ஆரம்பத்திலிருந்ததைக் காட்டிலும் பிரிடனுக்கு சொந்தமாக வியாபாரக் கப்பல்களிப்பொழுது அதிகம்; மேலும், அயல் நாட்டுக் கப்பல்களும் நூற்றுக்கணக்காயிருக்கின்றன.

15—7—40.

18. பிரான்ஸ், பெல்ஜிய சண்டைகளில் ஜெர்மனிக்கு நஷ்டமான விமானங்களின் தொகையை இங்கிலாந்து (B. B. C.) கொடுத்திருக்கிறது. இது நம்பத்தக்கதில்லை. அவர்கள் சொல்லுகிற அவ்வளவு விமானங்கள் ஜெர்மனியில் இல்லை.

குறிப்பு:—2,500 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டதாக பிரிடிஷ் கணக்கு. ஜெர்மனியில் விமானங்கள் இவ்வளவுகூடக் கிடையாதா?

B.—இதாலியின் பொய்கள்.

10—7—40.

19. டியூக் அப் வின்ட்ஸரை பிரிடனுக்குத் திரும்பிவராதபடி தடுக்க மிஸ்டர் சேம்பர்லேன் (Mr. Chamberlain) தீர்மானித்துவிட்டார். திரும்பி வந்தால் கைதுசெய்யப்படுவாரென்று வதந்திகளிருக்கின்றன.

குறிப்பு:—இவர் ரஜா எடுத்துக்கொண்டு பல தடவைகள் பிரிடனுக்கு வந்திருக்கிறார்; குடியேற்ற நாடு ஒன்றுக்கு கவர்னராகவும் போகப்போகிறார். ஜெயிலுக்கு அனுப்பக் கூடியவர்களை கவர்னர் பதவிக்கு நியமிப்பது இங்கிலாந்துக்கு வழக்கமில்லை.

20. மத்தியதரைக் கடல் சண்டையில் இதாலி துறைமுகங்களை பிரிடன் தாக்கப்பார்த்தது. சண்டைக் கப்பல்களையும், விமானங்களையும் கொண்டு இதாலி எதிர்க்கவே பிரிடனுடைய எண்ணம் தடைப்பட்டது. ஆகவே மத்தியதரைக் கடல் இப்பொழுது இதாலிவசம் வந்துவிட்டது.

குறிப்பு:—மேற்கண்ட செய்தி இதாலியிலிருந்து வந்த அந்த தினமே ஜெர்மனியிலிருந்து செய்தி பின் வருமாறு வந்தது:—"இதாலிய கப்பல்களை பிரிடன் எதிர்க்கப்போகிறது; துறைமுகங்களையும், விமான நிலயங்களையும் எதிர்க்குமோவென்று அஞ்சி இதாலி போர்க்கப்பல்கள் துறைமுகங்களிலிருந்து வெளியேறிவிட்டன."

11—7—40.

21. ஹூட் (Hood) என்ற பிரிடிஷ் யுத்தக் கப்பலை இதாலிய விமானப் படைகள் எதிர்த்த தினங்கள் (ஜூலை 8, 9) பிரபல தினங்களாக இனி, இதாலிய சரித்திரத்தில் விளங்கும்.

குறிப்பு :—ஆனால், கப்பலின்மேல் குண்டு விழவில்லை.

13—7—40.

22. ஹெலி ஸிலாஸி (Haile Selassie)யை ராஜாவாக செய்திருப்பதுதான் இந்த யுத்தத்தின் சம்பவங்களுக்குள் மிக நகைப்பானது.

குறிப்பு :—கொஞ்ச நாளைக்கு முன் முஸலோனியின் குமாரர்கள் ப்ருனோ (Bruno) வும், விட்டோரியோ முஸலோனி (Vittorio Mussolini) யும், அபிஸீனிய கிராமத்தார்களை பீரங்கியாலும், விமானத்தாலும் வேடிக்கையாய் சுட்டு வேட்டையாடினது நகைக்கக்கூடிய சம்பவம் இல்லையா?

PROGRAMME OF LECTURES

OF THE

Pudukkottai War Information Bureau.

1940—

August	2, Friday ...	Town Hall	...	5.00 p. m.	Lecture IV.
	3, Saturday ...	Nachandupatti	...	4.30 p. m.	General.
		Ponnamaravathi	...	5.00 p. m.	"
	4, Sunday ...	College	...	10.35 a. m.	Lecture IV.
		Rani's School	...	10.35 a. m.	"
		Tirumayyam	...	4.30 p. m.	"
		Alangudi	...	4.30 p. m.	"
	5, Monday ...	Andakkulam	...	9.00 a. m.	General.
		Keeranur	...	5.00 p. m.	"
	6, Tuesday ...	C. S. M. School	...	10.00 a. m.	Lecture IV.
		Rayavaram	...	4.30 p. m.	"
		Annavasal	...	4.30 p. m.	"
	8, Thursday ...	Teachers' Association, Town.		3.30 p. m.	"
	10, Saturday ...	Town Hall	...	6.30 p. m.	Lecture V.
	11, Sunday ...	Rani's School	...	10.35 a. m.	"
		College	...	10.35 a. m.	"
		Tirumayyam	...	5.00 p. m.	"
		Alangudi	...	5.00 p. m.	"
	12, Monday ...	Kulipirai	...	5.00 p. m.	"
	13, Tuesday ...	C. S. M. School	...	10.00 a. m.	"
		Vendampatti	...	4.30 p. m.	"
		Konapet	...	5.00 p. m.	"
	14, Wednesday..	Arimalam	...	5.00 p. m.	"
		Karambakkudi	...	5.00 p. m.	"
	15, Thursday ...	Rangiam	...	4.30 p. m.	"
		Ramachandrapuram	...	5.00 p. m.	"
		Viralimalai	...	5.00 p. m.	"

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,850—2-8-40.